# சுவடி



## விளம்பி வருடம்

டிசம்பர் 2018 சுவடி 3

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

*பாய்சி தமிழ்ச் சங்க இதழ்*

Webpage :
https://www.boisetamilsangam.org
Facebook:
www.facebook.com/boisetamilsangam



## பொருளடக்கம்


1. ஆசிரியர் உரை ........................................................................2
2. தலைவர் உரை ........................................................................3
3. செயலாளர் பக்கம் ...................................................................6
4. பொருளாளர் செய்தி ...............................................................7
5. பாய்சி தமிழ்ப்பள்ளி ...............................................................9
6. குழந்தைகள் பக்கம் ...............................................................10
7. சிறுகதை.....................................................................................12
8, திருக்குறள் பக்கம்.......................................................................15
.
9. கோடை திருவிழா ....................................................................17
10. புகைப்படத் தொகுப்பு-.........................................................18
11. உபயதாரர்கள் பக்கம் ................................................... 21
12. நிர்வாகக் குழு புது விவரம் .................................. 22


## ஆசிரியர் உரை

சுவடியின் மூன்றாவது பதிப்பில் உங்களை சந்திப்பதில் மிக மகிழ்ச்சி அடைகிறோம். கோடை திருவிழா தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஆகஸ்ட் மாதம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதில் கலந்து சிறப்பித்த அனைத்து தமிழ்மக்களுக்கும் தமிழ்ச் சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இனி வரும் கொண்டாட்டங்களையும் மிக சிறப்பாக நடத்த தங்கள் மேலார்ந்த ஆதரவை தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.. இந்த இதழில் கோடை விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சிலவற்றை இடம் பெற செய்கிறோம். அதே போல் தாங்கள் தங்கள் படைப்புக்களை அனுப்பி மேலும் வெற்றி பெறச்செய்ய உங்களை அன்புடன் வேண்டி கொள்கிறோம். நன்றி.

அனைவர்க்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள் !!

தங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
**boisetamilsangam18@gmail.com**

**-திருமதி. உமா ராமசாமி**
**பொறுப்பாசிரியர்**



# தலைவர் உரை

பாய்சி வாழ் தமிழ் மக்களுக்கு வணக்கம்!
இந்த சுவடி இதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு (2018) உங்கள் அனைவருக்கும் சிறப்பான ஆண்டாக அமைந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் ஆதரவால், இந்த ஆண்டு, பாய்சி தமிழ்ச் சங்கத்திற்கும் ஒரு மைல் கல்லாக அமைந்தது என்று சொன்னால் அது மிகை ஆகாது. ஆண்டின் நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பாய்சி தமிழ்ச் சங்கம் இந்த ஆண்டில் நிறைவேற்றிய செயல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகிறேன்.
ஆண்டின் தொடக்கத்தில் பல வலிமையான இலக்குகளை சங்கத்தின் சார்பில் உங்கள் முன்னால் வைத்திருந்தோம். இவை அனைத்தையும் வெற்றிகரமாக முடித்து உங்கள் முன்னால் பார்வைக்கு கீழே கொடுத்துள்ளோம்.

* பாய்சி தமிழ்ச் சங்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள் முடிவு செய்யப்பட்டு, நிர்வாகக் குழுவும் இயக்குனர் குழுவும் அமைக்கப் பட்டன .சங்கத்தின் கோட்பாடுகள் எழுதப்பட்டது. சங்கத்தின் லாபமற்ற நோக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரி தவிர்ப்பு அந்தஸ்து (501C) வழங்கப் பட்டது

* தொண்டுள்ளதினர் உதவியாலும் தன்னார்வலர்கள் உழைப்பாலும், மூன்று கலாச்சார நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்தப் பட்டன (மார்ச் பாட்லக், ஏப்ரல் தமிழ் புத்தாண்டு, மற்றும் ஆகஸ்ட் கோடை திருவிழா). சுவடி தமிழ் இதழ் ஆரம்பிக்கப்பட்டு 2 இதழ்கள் இது வரை வெளி வந்துள்ளன.

* பாய்சி தமிழ் பள்ளி வெற்றிகரமாக ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது. இந்த ஆண்டில் முப்பதிற்கும் மேல் சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேர்ந்துள்ளனர். பாய்சி தமிழ்ப் பள்ளி அமெரிக்கன் தமிழ் கல்விக் கழகத்தின் (ATA) வாழ்நாள் உறுப்பினராக சேர்ந்துள்ளது,

* பல ஸ்பான்சார்கள் சங்கத்திற்கு நன்கொடை வழங்கி உள்ளனர்

* பாய்சி தமிழ்ச் சங்கத்திற்கு என ஒரு இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது இதை மேலும் மெருகேற்றும் பணி நடந்து வருகிறது

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் கோடை திருவிழா நிகழ்ச்சிகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. பாட்லக் மற்றும் தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கான உணவு தமிழ் சமூகத்தினரால் தயாரிக்கப்பட்டது. கோடை திருவிழா நிகழ்ச்சிக்கு உணவு மசாலா பிஸ்ட்ரோ உணவகத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. இந்த நிகழ்ச்சிகள் உங்கள் உதவியாலும் தன்னார்வலர்கள் உழைப்பாலும் நன்றாக நடந்தன. உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஆண்டின் தொடக்கத்தில், பாய்சி தமிழ்ச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் சுமார் $2100 உபரியாக இருந்தது. கலாச்சார நிகழ்ச்சிகள், தமிழ்ப் பள்ளி பதிவு செய்தல், இணைய தளம் பதிவு செய்தல், வரி தவிர்ப்பு அந்தஸ்து பதிவு செய்தல், மற்றும் இதர சில செலவுகள் செய்யப் பட்டன. கலாச்சார நிகழ்ச்சிகள் சுமார் $900 நட்டம் அடைந்தது. ஆனால் ஸ்பான்சார்கள் அளித்த நன்கொடை அதிகப்படியான பண வரவு கொடுத்தது. இந்த ஆண்டின் நிறைவில் சங்கத்தின் வங்கி கணக்கில் சுமார் $6100 பண வரவு இருக்கும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. இது ஆண்டின் தொடக்கத்தை விட சுமார் $4000 அதிகம் என்பதை இங்கே அனைவருக்கும்

நினைவு படுத்த விரும்புகிறேன். பாய்சி தமிழ்ச் சங்கத்தின் ஒரு முக்கிய குறிக்கோள் தமிழ் மக்களுக்கும் அவர்கள் முன்னேற்றத்திற்கும் உதவி செய்வது. 2018-ல் நமது சங்கத்தின் பண நிலைமை முன்னேற்றம் இந்தக் குறிக்கோளை நோக்கி நமது பயணத்தை தொடர ஆதரவாக அமைந்துள்ளது. இதன் பேரில், சுமார் $3000 பணத்தை ஒரு நல்ல காரணத்திற்க்காக நன்கொடையாக வழங்கலாம் என்ற கருத்தை உங்கள் அனைவர் முன்னிலும் வைக்க பாய்சி தமிழ் சங்கக் குழு ஆசைப் படுகிறது. இந்த நன்கொடை நமது சங்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளுடன் ஒத்ததாக இருக்க வேண்டும். இந்த நன்கொடை அளித்த பின்னரும், நமது சங்கத்தின் வங்கிக் கணக்கில் $3200 பணம் இருக்கும். இது இந்த ஆண்டின் தொடக்கத்தை விடை சுமார் $1000 அதிகம் என்று அனைவருக்கும் நினைவு படுத்தக் கடமைப் பட்டுள்ளேன். இந்தத் தொகை நமது 2019-ம் ஆண்டின் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும்.

இந்தத் திட்டத்தை அமல் படுத்தும் வகையில் உங்களுக்கு தமிழ்நாட்டில் தெரிந்த நல்ல சமூக அமைப்புகள் அல்லது காரணங்கள் (சங்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள் ஒத்ததாக இருக்க வேண்டும்) இருந்தால் அதை எங்களுக்கு பரிந்துரை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.. உங்களது பரிந்துரையை எங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். நாங்களும் பல சமூக அமைப்புகளுடனும், சமூக ஆர்வலர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். அனைத்துப் பரிந்துரைகளையும்
ஆய்வு செய்த பிறகு, ஜனவரி மாதத்தில் பொங்கல் விழாவில் சந்திக்கும் பொழுது
உங்கள் அனைவர் முன்னில் கொண்டு வந்து இறுதி முடிவு எடுக்க முடிவு செய்துள்ளோம்.
உங்களுக்காக சங்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள் இந்தச் சுவடி இதழில் கொடுக்கப் பட்டுள்ளது.

2018 போலவே 2019-ம் ஆண்டிலும் பாய்சி தமிழ்ச் சங்கம் பல குறிக்கோள்களை நோக்கி பயணம் செய்யும். இவை அனைத்தையும் உங்களுடன் அடுத்த சந்திப்பில் பகிர்ந்து கொள்ள திட்டமிட்டுள்ளோம். நமது அடுத்த நேர்முக சந்திப்பிற்கான வாய்ப்பு பொங்கல் பண்டிகையை ஒன்று சேர்ந்து கொண்டாடும் வாய்ப்பாக அமைந்துள்ளது. தற்போதைய கணக்கின் படி, ஜனவரி 12-ம் தேதி பாய்சி யில் பொங்கல் பண்டிகை கொண்டாட நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம். இது பற்றிய தகவல்கள் இந்தச் சுவடி இதழில் கொடுக்கப் பட்டுள்ளது.

மீண்டும் ஒருமுறை, உங்கள் அனைவருக்கும் பாய்சி தமிழ் சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஆதரவும், அன்பும் எங்களுக்கு ஊக்கம் அளிக்கும் அருமருந்து. உங்கள் அனைவரையும் நேரில் சந்திக்க ஆர்வமாக உள்ளோம். இந்தத் தருணத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பாய்சி தமிழ்ச் சங்கம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. மீண்டும் சந்திப்போம் இனிய புத்தாண்டு – 2019!

அன்புடன்,
நாகா சந்திரசேகரன்
***தலைவர்***

தமிழ்நாட்டு நலத் திட்டத்திற்கான விவரங்களுக்கு boisetamilsangam18@gmail.com அல்லது admin@boisetamilsangam.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும் ,

## சங்கத்தின் பார்வை மற்றும் நோக்கம் மீண்டும் உங்களுக்காக தரப்பட்டிருக்கிறது

### பார்வை (vision)

தமிழ் மொழி, கலாச்சாரம் மற்றும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவது.
(Advancement of Tamil language, culture and the cause of Tamil people)

### பணி (mission)

1. தமிழ் மக்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களிடையே தமிழ் மற்றும் தமிழ் கலாச்சாரத்தை கொண்டாடுவது.
(To celebrate Tamil language and culture among Tamil people & others interested in learning about Tamil )

2. தமிழ் நிகழ்ச்சிகைளை நடத்துவது, பண்டிகைகளை கொண்டாடி அதில் அனைவரையும் பங்கேற்க வைப்பது மற்றும் அதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு நமது கொண்டாட்டங்களின்/சம்பிரதாயங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.
(Conduct events that celebrate Tamil functions and encourage everyone to participate. Use these avenues to teach next generation about the significance of festivals and rituals)

3. பாய்சி வாழ் தமிழ் மக்களை ஒன்று படுத்தி அவர்களுக்கிடையே தொடர்பை மேம்படுத்துவது
(Unite people living in Boise and help promote interaction among Tamils)

4. தமிழ் மொழி மற்றும் தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆதரவளிப்பது.
(Provide support to the development and propagation of Tamil language , Tamil people and cause of Tamil)

5. பாய்சியில் உள்ள இந்திய சமூகத்தினிடையே தமிழ் மற்றும் தமிழ் கலாச்சாரத்தை பரப்புவது மற்றும் வருங்கால இளம் தலைமுறையினர் இடையே தமிழை பற்றிய விழிப்புணர்வு , மொழி மற்றும் கலாச்சார உணர்வை மேம்படுத்துவது.
(spread the Tamil culture within the existing Indian community and instill within our upcoming youngsters the value and essence of Tamil)

## செயலாளர் பக்கம்

.நமது பாய்சி தமிழ்ச்சங்கத்தின்  புதிய செயலாளராக திருமதி. அர்ச்சனா சுந்தரராமன் அவர்கள் பொறுப்பேற்று உள்ளார். அவரை பாய்சி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வாழ்த்தி வரவேற்கிறோம்..

அவருடைய செய்தி அடுத்த இதழில் வெளிவரும் .






# பொருளாளர் செய்தி

ஆகஸ்டு மாதத்தில் கோடை திருவிழா இனிதே நிறைவேறியது. இந்த விழாவுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டது. மேலும் நமது தமிழ் சமூகத்தினர் நன்கொடை வழங்கினார்கள். உணவு மசாலா பிஸ்ட்ரோ உணவகத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. உணவு மற்றும் இதர செலவுகள் போக ~160 சேமிப்பு கிடைத்தது. விழாவிற்கான வரவு செலவு கணக்கு உங்கள் பார்வைக்கு இங்கு வழங்கப்பட்டுள்ளது

| **Summer Thiruvizha Revenue & Expenses (Aug 2018)** | | |
|---|---|---|
| **Item Description** | Income | Expenses |
| Food - Bistro, buttermilk, cotton candy, juice, water | | 789.54 |
| Insurance | | 135.97 |
| Face painting | | 130.00 |
| Decor and Games | | 96.93 |
| Utensils | | 57.04 |
| Kids gifts | | 40.79 |
| Ticket | 1150.00 | |
| Donations | 263.40 | |
| Total | 1413.40 | 1250.27 |
| Net Balance | 163.13 | |

2018 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுமார் $2100 பாய்சி தமிழ்ச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் சேமிப்பு இருந்தது. இந்த ஆண்டின் அனைத்து வரவு செலவு கணக்குகளும் உங்கள் பார்வைக்காக இங்கு வழங்கப் பட்டுள்ளது. 2018ஆண்டின் நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வங்கியில் சுமார் $6200 உள்ளது. ஆதரவாளர்களைச் (sponsors) சந்தித்து நிதி திரட்டிய தன்னார்வலர்களுக்கும் நன்கொடை வழங்கிய சமூகத்தினர்க்கும் மிக்க நன்றி! இவ்வாறு பெறப்பட்ட நன்கொடையை (donations) தமிழகத்தில் நடக்கும் நற்பணிகளுக்கு கொண்டு சேர்கக வேண்டுமென்பது நமது குறிக்கோள். இவ்வாறு இந்த ஆண்டு $3000 வழங்கலாம் என்ற கருத்தை உங்கள் முன் வைக்க பாய்சி தமிழ்ச் சங்கக் குழு ஆசைப்படுகிறது. இதை பற்றிய விபரம் பொங்கல் விழாவின் போது தேர்வு செய்யப்படும். 2019 ஆம் ஆண்டிலும் பாய்சி தமிழ்ச் சங்கத்திற்கு உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

| Date | Item Description | Income | Expenses | Net Balance |
|---|---|---|---|---|
| 10/12/17 | Starting Balance for 2018 | | | 2141.36 |
| 01/30/18 | Non-Profit Registration | | 275 | 1866.36 |
| 02/12/18 | Website Registration (3 years) | | 240 | 1626.36 |
| 03/11/18 | March Potluck Hall Rental, check #114 | | 418 | 1208.36 |
| 04/16/18 | Tamil New Year Hall advance, check #100 | | 721 | 487.36 |
| 04/19/18 | Sponsors' checks | 3750 | | 4237.36 |
| 04/19/18 | Cash proceeds from Tamil New year | 500 | | 4737.36 |
| 04/26/18 | South Junior High School Final Invoice | | 688.43 | 4048.93 |
| 04/27/18 | Test EFT Deposit | 10 | | 4058.93 |
| 05/17/18 | Sponsors' checks | 400 | | 4458.93 |
| 05/17/18 | Cash proceeds from Tamil New year | 321.87 | | 4780.8 |
| 05/17/18 | Donor check | 125 | | 4905.8 |
| 05/23/18 | Donor proceeds from Micron | 98.5 | | 5004.3 |
| 06/22/18 | Donor proceeds from Micron | 197.3 | | 5201.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 07/25/18 | Donor proceeds from Micron | 394.6 | | 5596.2 |
| 09/11/18 | Tamil School Books for 2018-19 | | 1080 | 4516.2 |
| 09/14/18 | Farmers Insurance Sponsor check | 250 | | 4766.2 |
| 09/14/18 | Summer Thiruvizha | 165 | | 4931.2 |
| 09/14/18 | Tamil School Fees' deposit | 1550 | | 6481.2 |
| 10/12/18 | Tamil School Fees' deposit | 100 | | 6581.2 |
| 10/24/18 | Donor proceeds from Micron | 197.8 | | 6779 |
| 11/05/18 | Tamil School Lifetime Registration | | 500 | 6279 |

**-திருமதி . கௌரி தண்டபாணி**
**பொருளாளர்**

## *பாய்சி தமிழ்ப்பள்ளி*

பாய்சி தமிழ் பள்ளியின் 2018-19 ஆம் கல்வி ஆண்டு 09-16-2018 அன்று துவங்கியது. பாய்சி தமிழ்ப் பள்ளி இந்த 5-ஆம் ஆண்டில் அமெரிக்கன் தமிழ் கல்விக் கழகத்தின் (ATA) வாழ்நாள் உறுப்பினராக சேர்ந்துள்ளது.. இந்த கல்வி ஆண்டில் சுமார் 33 மாணவ, மாணவியர் பதிவு செய்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெறிவித்து கொள்கிரோம். மழலை, நிலை-1, நிலை-3 மற்றும் நிலை-4 வகுப்புகள் அமைத்து பெற்றோர் மற்றும் தன்னார்வலர்களின் உதவியோடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஆண்டு அமெரிக்கன் தமிழ கல்விக் கழகம்(ATA) பள்ளி நிர்வாக திட்டம் (Online School Management System) முதல் முறையாக அமைத்து உள்ளது. இதன் மூலம் மாணவ மாணவியரின் வருகை (attendance), வீட்டுப் பாடம் (homework) மற்றும் மதிப்பெண்கள் (marks) பதிவு செய்ய முயற்சி எடுக்கப்படும்.

2017-18 ஆம் கல்வி ஆண்டிற்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படும். தமிழ்ப் பள்ளியை தொடர்ந்து ஊக்குவிக்கும் அனைத்து பெற்றோருக்கும், மாணவ மாணவியர்க்கும் எங்கள் நன்றி!

**இப்படிக்கு ,**
**-பாய்சி தமிழ்ப் பள்ளி ஒருங்கிணைப்பாளர்கள்**

## குழந்தைகள் பக்கம்

இந்த இதழ் குழந்தைகள் பக்கத்தில் சில புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இது போல் மேலும் தங்கள் குழந்தைகளின் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி **boisetamilsangam18@gmail.com** என்ற முகவரிக்கு அனுப்பி சுவடியை தொடர்ந்து வெற்றி பெற செய்யுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறோம் ,



***இடம் : கோவை , தமிழ்நாடு***




***இடம்: பாய்சி, ஐடஹோ***

***புகைப்படம் எடுத்தவர் - அன்வீதா சுரேஷ்***

# சிறுகதை -அகங்காரம்

பார்கவி Madam, Sir உங்களை கூப்பிடுறாரு. Peon சொன்னதை கேட்டு பார்கவி நவீன் Room-க்கு ஓடினாள்.

Hello Madam Good Morning. அந்த Rajasthan Granites File என்னாச்சு? முடிச்சுட்டேன் சார்..

ஆர்டர் Pick-up  பண்ண Airport-க்கு  யார் போறாங்க?

மோகன அனுப்பலாம்-ன்னு இருக்கேன் சார்.

இல்ல சுந்தர அனுப்புங்க.

OK சார்.

அப்புறம் அந்த Evergreen Granites Order என்னாச்சு? Pick-up பண்ணியாச்சா?

இல்ல சார். அதுலதான் ஒரு தப்பு ஆகிடுச்சு. Payment கம்மி-ன்னு சொல்லி Airport-ல திருப்பி அனுப்பிட்டாங்க.

ஏன்?

இல்ல சார். அதுல Excise Tax கம்மியா போட்டுட்டேன். என்னோட தப்புதான்.

இந்த Order Pick-up பண்ணறப்போ ரெண்டையும் சேத்து எடுத்துட்டு வர சொல்றேன்.  ஏன் அப்படி பண்ணினீங்க? எல்லா File-ஐயும் கார்த்திகேயன்-கிட்ட காட்டிட்டு அனுப்புங்க-ன்னு எத்தன தடவ சொல்றது?

சார் கார்த்திகேயன் சார் தான் வரலையே.

இன்னியோட 3 நாள் ஆகுது.

எல்லாம் நானேதான் செய்கிறேன்.

அதுதான் எல்லாம் தப்பு தப்பா நடக்குது.

அப்புறம், இன்னும் போன வார-த்து Sales figures என் Table-க்கு வரல.

Sales-ல சுரேஷை வர சொல்லுங்க.

Partners பத்தி Potential target list பண்ணச் சொல்லி 1 வாரம்-ஆகுது.

இன்னும் சம்பத் இத முடிக்கல.

நீங்க போயிட்டு அவங்க ரெண்டு பேரையும் வர சொல்லுங்க.

சரி சார்.

பார்கவி வெளியேறினாள்.

சுரேஷ்ம், சம்பத்தும் உள்ளே நுழைந்தார்கள்.

என்னப்பா வேலை பாக்குறீங்க?

அது வந்து சார்...

போதும் போதும். ஏதாவது excuse சொல்லாதீங்க.

கார்த்திகேயன் இல்லனா நீங்க யாரும் வேலை செய்ய மாட்டேன்குறீங்க. கார்த்திகேயன் பற்றி இவ்வளவு சொன்ன பிறகு அவரைப்பற்றிய முன்னுரை தேவை. கார்த்திகேயன் என்பதை விட கார்த்திகேயன் சார் என்றுதான் குறிப்பிட வேண்டும். நவீன் அப்பா காலத்துலேருந்து Company-க்காக அயராமல் உழைக்கிறவர்.

Office Assistant-ஆக Company-ல் சேர்ந்தவர். படிப்படியாக Business-ன் நெளிவு, சுளிவுகளை கற்றுக்கொண்டு இப்போது company-ல் முக்கிய நபர். அவருடைய  அபார ஞாபக சக்தியும், எதையும் தீர்க்கமாக ஆராய்ந்து தவறு இல்லாமல் செய்து முடிப்பதும் அவருடைய குணாதிசயங்கள். மேலும் எல்லா வேலைகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் சேர்ந்து கொண்டது. அதனால்தான் company-ன் எல்லா department வேலையும் அவருக்கு தெரியும்.

நவீன்-க்கு அவர் சொன்னதுதான் வேதவாக்கு. காரணம் எத்தகைய பிரச்சினையையும் அவரால் தீர்த்து வைக்க முடியும். உதாரணத்துக்கு ஒன்று சொல்லலாம்.

இவர்கள் Granite supply செய்யும் Real Estate கம்பனி-க்கு உடனடியாக Granite தேவை இருந்தது.

Granite எல்லாம் airport-ல் excise clearanace-க்காக waiting. அடுத்த நாள் lorry ஸ்ட்ரைக். அதனால் உடனே clear பண்ண வேண்டிய கட்டாயம்.
கார்த்திகேயன் Airport-க்கு போனார்.
அன்னைக்கு முழு நாள் அங்கேயே தங்கி அன்னைக்கே Clearance வாங்கி அவருக்கு தெரிந்த Lorry Owner-டம் அடுத்த நாள் Delivery எடுக்கும் படி செய்து பிரச்சினையை தீர்த்து வைத்தார்.
சரி நிகழ் காலத்துக்கு வருவோம்.
நவீன் சுரேஷையும், சம்பத்தையும் வறுத்து எடுத்தான்.
இங்க என்ன நடக்குது? நான் ஒரு வேலை சொன்னால் நீங்க எதுவுமே செய்ய மாட்டேன்கிறீங்க.
சார். நாங்க செய்ய வேண்டியது எல்லாம் முடிச்சாச்சு சார்.
கார்த்திகேயன் சார்-க்கு accident ஆச்சுல்ல. அதனால அவர் வரல சார்.
இன்னியோட 3 நாள் ஆகுது. அவர் வந்த உடனே எல்லாம் confirm பண்ணி உங்க கிட்ட submit பண்ணிடரோம் சார்.
இன்னொருத்தரை நம்பியே எத்தனை காலம் வேலை செய்வீர்கள்?
நீங்களும் வேலை கற்றுக்கொள்ள வேண்டியதுதானே?
சரி சரி. எல்லா File-ம் Ready பண்ணுங்க. நான் இன்னிக்கு evening கார்த்திகேயன்-சாரை போய் பாக்க போறேன். என் கூட நீங்களும் வரணும்.
அவர் எந்த Hospital-ல இருக்கார் தெரியுமா?
சார் எனக்கு தெரியும், சுரேஷ் சொன்னான். எங்க வீட்டு பக்கத்திலதான் Hospital இருக்கு.
அப்போ OK. evening Ready-ஆக இருங்க.
சரி சார்.
சுரேஷ்-ம், சம்பத்-ம் தப்பித்தோம் பிழைத்தோம் என வெளியேறினார்கள்.
அன்று சாயாங்கலாம் நவீன் சொன்னபடி நவீன், சுரேஷ், சம்பத் மூன்று பேரும்Hospital போனார்கள்.
Orange, Apple எல்லாம் வாங்கிக்கொண்டு வந்த நவீன்-ஐ பார்த்ததும் கார்த்திகேயன் ரொம்பவே நெகிழ்ந்து போனார்.
என்னாச்சு கார்த்திகேயன் ஸார்.
ரொம்ப ஒன்னும் பெருசா இல்ல ஸார்.
நான் டூ-வீலர்-ல தான வரேன். நம்ம ஆஃபீஸ் பக்கம் வந்து U-turn எடுக்கும் போது Straight-ஆ வந்த lorry லேசா தட்டிட்டு போய்ட்டான்.
Scooter skid ஆகி விழுந்துட்டேன். Hair-line Fracture தான். 3,4 வாரத்துல சரி ஆகிடுவேன்.
கார்த்திகேயன் ஸார், ஒரு Car வாங்கிக்கோங்க-னு சொன்ன கேக்க மாட்டேங்குறீங்க. எத்தன தடவ தான் நான் சொல்றது?
கம்பனிக்காக எவ்வளவோ செய்யீறீங்க. Company உங்களுக்கு ஒரு Carவாங்கித்தராதா?
எனக்கு இந்த Scooter ரொம்ப பழகிப்போச்சு ஸார்.
சொன்னா கேக்க மாட்டீங்களே. சரி அத விடுங்க.
அப்புறம் கார்த்திகேயன் ஒரு சின்ன help. இவங்கள சில Files கொண்டு வர சொல்லி இருக்கேன்.
Just Review பண்ணி கொடுத்துடுங்க. ஒண்ணும் அவசரம் இல்ல. 1 வாரம் time எடுத்துக்குங்க. இவங்க யாராவது வந்து collect பண்ணிக்க சொல்றேன்.
நீங்க complete-ஆ cure ஆனப்புறம் வாங்க. ஒண்ணும் அவசரம் இல்ல.
சிறிது நேரத்தில் சென்று விட்டார்கள். கார்த்திகேயன் பெருமையாக தன் மனைவி கௌரி-ஐ நோக்கினார்.
என்னவோ சொல்லுவியே. Company-ஏ கதியா இருக்கேன்-ன்னு.
இப்போ பாத்தியா? நான் இல்லாம அங்க ஒண்ணும் நடக்காது.
நான் ஒரு ஆள் செய்கிற வேலய இத்தன பேர் சேந்தும் செய்ய முடியல பாத்தியா?

கௌரி ஒன்றும் பேசவில்லை.
ஒரு வாரம் ஓடியது. கார்த்திகேயன் வேலைகளை முடித்து வைத்திருந்தார்.
யாரோ வந்து File-களை வாங்கிச்சென்றார்கள்.
மேலும் ஒரு வாரம் ஓடியது.
கார்த்திகேயன்-க்கு பொழுது போகவில்லை.
நடக்க முடியாதலால் வெளியே எங்கும் செல்லவும் முடியவில்லை. TV-ஐ எத்தனை நேரம் தான் பார்ப்பது?
விந்தி விந்தி நடந்து Kitchen-க்கு வந்தார்.
அங்கே கௌரி சமயல் செய்து கொண்டு இருந்தாள்.
எதுக்குங்க இங்க எல்லாம் வரீங்க?
உனக்கு ஏதாவது Help பண்ணலாம்ன்னுதான்.
நெஜமாவே எனக்கு ஏதாவது Help பண்ண நினைச்சீங்கன்னா ஒரு புது Mixie வாங்கிக்கொடுங்க.
யேய் கௌரி என்ன ஆச்சரியமா இருக்கு?
அந்த Sumeet Mixie என்னவோ உன் கூட பொறந்த மாதிரி பேசுவ.
யாரும் கேட்டா கூட குடுக்க மாட்ட,
ஆமாங்க எல்லாம் வேலை செய்கிற வரைதானே உபயோகம். இப்போ அதுக்கு வயசு ஆகிடுச்சு. மக்கர் பண்ணுது.
இது எல்லாம் நம்ம உபயோகத்துக்கு வாங்கற பொருள்தான.
எப்போ நம்ம உபயோகத்த்துக்கு இல்லயோ அப்பவே தூக்கி போட்டுட்டு இன்னொன்னு வாங்க வேண்டியதுதான்.
இப்போ நீங்க Office போகிற வரைக்கும் நவீன் உங்களை வைத்து வேலை வாங்கினார்.
நீங்க Hospital-ல இருக்கும் போது கூட உங்கள விடல.
இப்போ எப்போ நீங்க வர மாட்டீங்கன்னு தெரிஞ்சுதோ அப்பவே வேற வழி பாக்கலயா?
அது மாதிரி தான் இதுவும்.
கார்த்திகேயன்-க்கு சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது.
நான் தான் என் Company-ஐ இயக்குகிறேன் என்பது வெறும் மாயை தானோ?
நானும் இந்த Mixie-ஐ போல் என் company-க்கு ஒரு கருவி மட்டும் தானோ?
கார்த்திகேயன் ஒன்றும் பேசாமல் TV பார்க்க திரும்பினார்.

***-க ப ஸ***
***(K.P.Srinivasan)***



திருக்குறள் பக்கம்

பால்: பொருட்பால்
அதிகாரம்/Chapter: வினைத்திட்பம் / Power in Action

குறள் 664:

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**

**சொல்லிய வண்ணம் செயல்.**

விளக்கம் :

**நான் இந்தச் செயலை இப்படிச் செய்யப் போகிறேன் என்று சொல்லுவது எல்லார்க்கும் சுலபம்; சொல்லியபடியே அதைச் செய்து முடிப்பதுதான் கடினம்.**

**English Couplet 664:**

Easy to every man the speech that shows the way;

Hard thing to shape one's life by words they say!

**Couplet Explanation:**

To say (how an act is to be performed) is (indeed) easy for any one; but far difficult it is to do according to what has been said.

பால்: பொருட்பால்
அதிகாரம்/Chapter: அறிவுடைமை / The Possession of Knowledge

குறள் 430

**அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**

**என்னுடைய ரேனும் இலர்.**

விளக்கம் :

**ஏதும் இல்லாதவரானாலும் அறிவுடையார் எல்லாவற்றையும் உடையவரே; எதைப் பெற்றவராய் இருந்தாலும், அறிவு இல்லாதவர் ஏதும் இல்லாதவரே.**

**English Couplet 430:**

The wise is rich, with ev'ry blessing blest;

The fool is poor, of everything possessed.


**Couplet Explanation:**

Those who possess wisdom, possess every thing; those who have not wisdom, whatever they may possess, have nothing.

## கோடை திருவிழா

கடந்த ஆகஸ்ட் மாதம் பாய்சி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கோடை விழா மிக கோலாகலமாக நடைபெற்றது. அதில் நமது தமிழ் சமூகத்தினர் பலரும் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாடினர். கோடை விழாவில் பல விளையாட்டுகள், முக ஓவியம், தமிழ் விளையாட்டுகள் பற்றிய விவரங்கள் ஆகியவை இடம்பெற்றன. மதிய உணவு மசாலா பிஸ்ட்ரோ மூலமாக அளிக்கப்பட்டது. இதில் பஞ்சு மிட்டாய், நீர் மோர் மற்றும் சுண்டல் போன்றவை வழங்க பட்டன. தமிழ் பள்ளிக்கான பதிவும் நடைபெற்றது . மொத்தத்தில் கோடை விழா கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் பங்கு கொண்டு சிறப்பாக நடத்தி கொடுத்த தன்னார்வலர்களுக்கும் மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவர்க்கும் பாய்சி தமிழ்ச்சங்கத்தின் சார்பில் மிகுந்த நன்றிகள்.

## இதில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சிலவற்றை உங்களுக்காக இங்கே தருகிறோம்.













# வர இருக்கும் நிகழ்ச்சிகள்

வர இருக்கும் பொங்கலை முன்னிட்டு பாய்சி தமிழ்ச்சங்கத்தின் சார்பில் பொங்கல் விழா ஜனவரி மாதம் 12ஆம் தேதி கோலாகலமாக கொண்டாடப்பட இருக்கிறது. இது குறித்த விவரங்கள் தங்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. தாங்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து கொண்டு விழாவை மிகச்சிறப்பாக நடத்திக்கொடுக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

## விளம்பரதாரர் பக்கம்

நமது விழாவிற்கான உபாயத்தாரர்களுக்கும் மற்றும் ஆதரவு அளித்த அனைத்து தமிழ் மக்களுக்கும் பாய்சி தமிழ் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.



## நிர்வாகக் குழு உறுப்பினர்கள் புது விவரம்

தலைவர் - திரு. நாகா சந்திரசேகரன்

துணைத் தலைவர் - திரு. கமல் முத்துகிருஷ்ணன்

செயலாளர் - திருமதி . அர்ச்சனா சுந்தரராமன்

பொருளாளர் - திருமதி. கௌரி தண்டபாணி

தகவல் தொடர்பு/ உபயதாரர்கள் பொறுப்பு - திரு .தீபக் வேதாச்சலம்

முகநூல் மற்றும் தகவல் தொடர்பு - திரு. ஸ்ரீனிவாசன் பாலகிருஷ்ணன்

வலைத்தள வடிவமைப்பு/ஒருங்கிணைப்பு - திரு. கமல் முத்துகிருஷ்ணன் / திருமதி. ஸ்ரீ திவ்யா கமல்

செய்திமடல் //magazine பொறுப்பு - திருமதி. உமா ராமசாமி

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு - திருமதி. உமா பழனிசாமி, திரு. ராம் ராஜு, திரு. அருண்குமார் , திரு. ராம்நிவாஸ்

